மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இன்றியமையாதது என்று அம்மையார் அவர்கள் சொல்வார்களேயானால், அதைப் பற்றி யோசித்து, பெண்களையும் உறுப்பினர்களாக நியமிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முற்படலாம்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, குதிரைப் பந்தயத்திலே ஏழை எளியவர்களும், வசதியற்றவர்களும் கூட ஈடுபடுவதால் அந்தக் குடும்பங்களின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. நமது மாநிலத்தில் குதிரைப் பந்தயத்தை ஒழித்து விட்டால், 'பாஸ்போர்ட்' வாங்கி வேறு மாநிலங்களுக்குச் செல்லும் நிலைமை ஏற்பட்டால், வசதி படைத்தவர்களால்தான் அது முடியும். வசதியற்றவர்கள் போக முடியாது. ஆகவே இந்தச் சாதாரண மக்கள் நிலையைக் கருத்திற்கொண்டு, அரசாங்கம் இதைப் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வேறு மாநிலங்களின் எல்லையில் இருக்கக்கூடிய வசதியற்றவர்கள், அப்போதும் போகத் தான் செய்வார்கள்.

தமிழ்நாட்டில் கள்ள நாணயங்கள்

* 113 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கள்ள நாணயங்கள் (நோட்டுகள்) தயாரிக்கிற கோஷ்டி ஒன்று தமிழகத்தில் நடமாடிக்கொண்டு இருக்கிறதாக புகார் ஏதாவது அரசுக்கு வந்ததா?

(இ) ஆம் என்றால், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. கே. என். குமாரசாமி : தமிழ்நாட்டில் இப்போது கேரளாவிலிருந்து அச்சிடப்பட்ட கள்ளநோட்டுகள் இருந்து வருவதாகச் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட நிலையைக் கேரள அரசாங்கமும் நம்முடைய அரசாங்கமும் சேர்ந்து நடவடிக்கை எடுத்துத் தடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 'ஸ்பெஷல் செல்' போட்டு, அதைத் தடுத்து நிறுத்த முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. கேரளாவில் உள்ள கள்ள நோட்டுக்கும் இங்குள்ள கள்ள நோட்டுக்கும் எவ்வளவு தொடர்பு இருக்கிறது என்பதைப்பற்றி புலன் விசாரணை நடைபெற்றது. இப்போது கேரளத்தோடு தொடர்பு கொண்டு, இரு மாநிலங்களிலுமுள்ள கள்ள நோட்டுகள் சம்பந்தமாக நமது மாநிலத்திலே புலன்விசாரணை செய்யப்பட்டு வருகிறது. இரண்டு மாநிலங்களும் சேர்ந்து இதற்கு ஒரு நடவடிக்கை எடுப்பது என்பது இயலாத காரியம்.

1972 சனவரி 29]

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Hon. Chief Minister whether it is a fact that a private mint has been unearthed in Madras recently?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுபற்றி ஒன்றும் இப்போது எனக்கு விபரமான தகவல் இல்லை.

* 114வினா.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்குப் விடை யளிப்பாரா :

(அ) 1971 செப்டம்பர் முதல் வாரத்தில் கோவையில் ஒரு வீட்டில் திடீர் சோதனை நடத்தப்பட்டு நகைகளும் நோட்டுகளும் கைப்பற்றப்பட்டனவா?

(இ) அவை திருடப்பட்ட பொருள்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) இது விஷயம் மத்திய ஆயத்துறையின் புலனாய்வில் உள்ளது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, அங்கு கைப்பற்றப் பட்ட நோட்டுகளில் கள்ள நோட்டு இருந்ததா என்று அறிய விரும்புகிறேன். அதோடு * தமிழ்நாடு பூராவும் அது பரவக் கூடிய நிலை இருக்கிறது. அதைத் தடுக்க அரசாங்கம் என்ன நட வடிக்கை எடுத்துள்ளது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு மாவட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடாது. எனவே * என்பதை எடுத்துவிடும்படி உத்தரவிடுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அங்கு கண்டுபிடிக்கப் பட்ட நகைகளை வைத்து கள்ளத்தனம் நடைபெற்றதாகத் தகவல் கிடைத்ததும், போலீஸார் சோதனை செய்து பலன் விசாரணை நடத்தினர். கைப்பற்றப்பட்ட நகைகளை, அவற்றின் உரிமையாளர் கள் யாரும் அடையாளம் காட்டவில்லை. அதனை கைப்பற்றப் பட்ட நகைகளை மத்தியப் புலனாய்வுப் பிரிவுக்கு மாற்றி இருக் கிறார்கள். கள்ள நோட்டுகள் இருந்ததாகத் தகவல் இல்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : துணைத் தலைவரவர்களே, திருவண்ணா மலையில் அண்மையில் இதுபோன்ற ஒரு குற்றம் கண்டுபிடிக்கப் பட்டதாக கூறப்படுகிறதே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உண்மை தான்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.